<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.13/2026 | Date | : 04.08.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : ஏழுமலை | Calling | : |
| Father Name | : பெருமாள் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.08.2026.

<u>(எதிரி முருகேசன் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பெரியேரிப்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 27-08-2025 ம் தேதி, மதியம் சுமார் 03.00 மணியளவில் எனது மகன் சுமன் என்பவர் கோவையிலிருந்து திரும்ப வீட்டிற்கு வருவதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் கோவை to சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள குப்பனூர் மேம்பாலம் அருகே வந்துகொண்டிருந்போது, அவருக்கு முன்னால் சென்ற லாரி திடீரென பிரேக் போட்டு நிறுத்தியதால் எனது மகன் லாரியின் பின் பக்கம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனது மகனின் தொலைபேசியில் இருந்து ஒரு நபர் அழைத்து தகவல் சொன்னார்.

2) உடனே, நான் கருங்கல்பாளையம் கணபதி மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்த்தேன். விபத்தில் எனது மகனுக்கு நெற்றி, தாடை, கை, கால்,

மார்பு ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. எனது மகன் மயக்க நிலையில் இருந்ததால் போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், 5 நாட்கள் கழித்து மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனை அழைத்து செல்லும் வழியிலேயே எனது மகன் இறந்துவிட்டார். எனது மகனின் பிரேத விசாரணையில் நானும் உடன் இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

1) சம்பவம் நடந்த பகுதி மேடான பகுதி என்றால் சரிதான். சம்பவத்தின்போது எனது மகன் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநர் பிரேக் எதுவும் போடவில்லை என்றும், எனது மகன் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று லாரியின் பின்பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல.

2) எனது மகன் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றும், எனது மகனின் இறப்பிற்கு இழப்பீடு பெறவேண்டி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Elumalai

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.13/2026 | Date | : 04.08.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : சரவணன் | Calling | : |
| Father Name | : மகாராஜா | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.08.2026.

(எதிரி முருகேசன் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், பழைய எடப்பாடி ரோட்டில் வசித்து பேக்கரியில் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 27-08-2025 ம் தேதி, மதியம் சுமார் 01.30 மணியளவில் நான் பச்சாம்பாளையத்தில் இருந்து வைகுந்தம் செல்வதற்காக கோவை to சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள குப்பனூர் பைபாஸ் அருகே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனம் அதற்கு முன்னால் சென்ற லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதுபோல் சத்தம் கேட்டது.

2) உடனே, நான் சென்று பார்த்தபோது அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு தலையில் பலத்த அடிப்பட்டு இரத்தம் வந்தது. உடனே, அவரை

ஆம்புலன்ஸ் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தில் அடிப்பட்ட நபரை பார்த்துகொண்டிருந்ததால் லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) விபத்து நடந்த பகுதி மேடான பகுதி என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்ட நபர் விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் அதை நான் பார்க்கவில்லை. விபத்தில் இறந்த நபர் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்திற்கும், எனக்கும் எவ்வளவு தூர இடைவெளி என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். எனக்கு முன்பாக வாகனங்கள் சென்றுகொண்டிருந்ததா என்றால் லாரி தான் சென்றுகொண்டிருந்தது.

2) விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் விபத்தை பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த மேம்பாலத்தில் ஒரே சமயத்தில் எத்தனை கனரக வாகனங்கள் செல்ல முடியும் என்றால் மூன்று வாகனங்கள் செல்ல முடியும். லாரி பாரம் ஏற்றிக்கொண்டு தான் சென்றுகொண்டிருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டிருந்ததற்காக விபத்தில் அடிப்பட்ட நபரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Saravanan